சமுதாய நலன் குறித்து செய்கின்ற இத்தகைய காரியங்களுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமே தவிர அதை எதிர்த்து போகிற போக்கைத் தவிர்க்க வேண்டுமென்று இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதன் வாயிலாக நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. சி. சண்முகம் :** ஜப்பான் நாட்டிலே நடைபெறுவதைப்போல் உடல் ஊனமுற்றோர்களுக்கு என்று தனியாக பயிற்சிப் பள்ளிகளைத் துவக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது தனியாகக் கேட்கப்பட வேண்டிய கேள்வி.

**வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர்களை குற்றவியல் நீதிபதிகள் பதவிக்கு நியமனம் செய்யும் திட்டம்.**

*வினா எண். 328—**திரு. மே. அ. இராஜ்குமார் :** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நீதித்துறையில் இரண்டாம் நிலை குற்ற இயல் நீதிபதிகள் பதவிக்கு வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர்களை நியமனம் செய்யவிருக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அம்முறை எப்பொழுது செயலபடுத்தப் படும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஒருங்கிணைப்புத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது. அப்படி செயல்படுத்தப்பட்டவுடன், வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர்கள் அந்த ஒருங்கிணைக்கப்பட இருக்கும் மாவட்ட முன்சீப் மற்றும்—மாஜிஸ்டிரேட்டு பதவிக்கு நியமிக்கப்படுவர்.

**ஆற்காட்டில் குற்றவுயல் நீதிமன்றம் அமைக்கும் திட்டம்**

*வினா எண் 329, **திரு. ஏ. எம். சேதுராமன் :** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காட்டில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் கொண்டுவர செயல்குறிப்பு அரசிடமுள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS